# ஆதாரம்



நம் வாழ்வின் ஆதாரம் எது. எதை நம்பி நம் ஒவ்வொரு நாள் வாழ்வையும் நாம் கடந்து சென்று கொண்டிருக்கிறோம். அநேகருக்கு பணம் ஒரு ஆதாரமாய் இருக்கிறது. சிலருக்கு பதவி, உடல் பெலன், ஞானம், இன்னும் சிலருக்கு மற்ற மனிதர்கள் என பலர் பலவற்றின் மேல் தங்கள் நம்பிக்கையை வைத்து அதை ஆதாரமாக கொண்டு வாழ்க்கையை வாழ்கின்றனர். இன்னும் பலர் காணவும், பேசவும் மாட்டாத கல்லின் மேலும், மண்ணின் மேலும் தங்கள் நம்பிக்கையை வைத்திருக்கின்றனர். இவற்றை எல்லாம் ஆதாரமாக கொண்டு தங்களை இது காப்பாற்றும், இவற்றால் தங்கள் வாழ்க்கை பாதுகாப்பாகவும், நிலையாகவும் இருக்கும் என்று எண்ணி வாழ்வோர் பலர்.

ஆனால் இவை எல்லாம், கடந்த கால வரலாற்றில் பலரை கைவிட்டிருக்கிறது. அதனால் தங்களை தாங்களே நொந்து இனி இவ்வுலக வாழ்வில் என்ன இருக்கிறது என்று தேவன் தங்களுக்கு கிருபையாய் தந்த வாழ்வை முடித்துகொள்வோர் அதிகம். பணத்தை, அதிகமான செல்வத்தை சேர்க்க,

அது நம்மை பாதுகாக்கும் என்று நினைத்து அதை தேடி சேர்த்து குவித்து வைத்தவர்கள், தாங்களும் பணத்தை, செல்வத்தை காப்பாற்ற முடியாது. அதே நேரத்தில் அதுவும், தங்களை காப்பாற்ற முடியாது என்பதை இறுதியில் தான் அறிந்து கொள்கின்றனர். அதனால் தான் எண்ணி முடியாத அளவு கோடானு கோடி பணம் இருந்தும், சிலர் வாழ்க்கையை முடித்து கொள்கின்றனர்.

ஆனால் அதே நேரத்தில், வாழும் வாழ்க்கையில் எத்தனையோ சோதனைகள், வேதனைகள் ஏற்பட்டாலும், சூறாவளி போன்ற சம்பவங்கள் நடந்தாலும், பணம், பொருள், பதவி, சரீர பெலன் மற்ற மனிதர்களின் சார்ப்பு என்று எதுவுமே இல்லாமல் இருந்தாலும், நம்பிக்கையோடு இப்பூமியில் வாழும் மனிதர்கள் உண்டு. சாதாரண மனிதர்களுக்கு கிடைக்க கூடிய, அடிப்படை தேவைகள் கூட கிடைக்க பெறாமல் இருந்தாலும், இன்னும் வியாதி, சரீர குறைபாடு, இழப்பு, தனிமை என பல கரடு முரடான பாதைகள் தங்கள் வாழ்வில் இருந்தாலும், அதன் மத்தியிலும், நம்பிக்கையோடு வாழ்கின்ற மக்கள் சிலர் உண்டு. இன்னும் ஒரு படி மேலாக, மற்றவர்களுக்கும் ஊக்கமளித்து வாழ்வை தொடர்ந்து வாழ உதவும் மக்களும் உண்டு.

வாழ்க்கையில் எல்லாம் இருந்தாலும், வாழ்வில் ஒரு பிடிப்பு இல்லாமல் அல்லது வாழ்க்கை என்றால் என்ன என்று தெரியாமல் வாழ்வோர் ஒருபுறம், ஆனால் எது இருந்தாலும், இல்லாமற் போனாலும், இது எனக்கு கொடுக்கப்பட்ட வாழ்க்கை, அதை வெற்றியோடு, சமாதானத்தோடு ஓடி முடிப்பேன் என்ற நம்பிக்கையோடு வாழ்கின்ற ஒரு கூட்ட மக்கள் மறுபுறம். இது மிகவும் சிந்திக்க வைக்ககூடிய ஒரு காரியம். எதின் மீதான நம்பிக்கை அல்லது எந்த ஆதாரத்தில் மேல் இவர்களுடைய வாழ்க்கையானது செயல்பட்டு கொண்டிருக்கிறது என்பதை நாம் சற்று ஆராய்வோமானால், நமக்கு கிடைக்கும் விடை இதுதான் **"அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன். ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன்; அவர் என் கால்களை மான்கால்களைப்போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார். இது நெகிநோத் என்னும் வாத்தியத்தில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதம். ", (ஆபகூக் 3:17-19)** ஆம் எல்லாவற்றையும் இழந்த நிலையிலும், **"அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்", (யோபு 13:15)** என்று யோபு கூறுகிறார்.

ஆம் இதே நம்பிக்கையே ஆபிரகாமை கானான் தேசத்தை நோக்கி புறப்பட செய்தது. இதே நம்பிக்கையே, பல போராடங்களுக்கு பின்பும், வாலிபனான யோசேப்பை நிலை குலையாமல் நிற்க செய்தது. தீயின் மத்தியில் நின்றபொழுதும், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோரை தீயின் வாசனை கூட படாமல் காத்தது. சிங்கங்களின் வாயை தானியேலின் முன் கட்டி போட்டது. இன்னும் எத்தனையோ காரியங்களை நாம் சொல்லி கொண்டே போகலாம். இவர்கள் யாரும் வாழ்வின் ஒவ்வொரு நாளையும் சுக போகமாய் அனுபவிக்க நினைக்கவில்லை. தாங்கள் இவ்வுலகில் எதற்காக

வாழ ஆண்டவர் அழைத்திருக்கிறாரோ அதை உணர்ந்து வாழ்ந்தனர். அதே நேரத்தில் நித்தியத்தை குறித்த ஒரு நம்பிக்கை இருந்ததால், தாங்கள் நம்பியிருக்கும் ஆதாரம், இவ்வுலகில் மட்டுமல்ல, அதற்கு பிறகும் தங்களை காக்க வல்லது என்பதை அவர்கள் உணர்ந்து இருந்தனர்.

அதனால் தான் இவ்வுலகில் நம்பிக்கையோடு வாழவும், அதே நேரத்தில் எந் நேரமும் இவற்றை விட்டு நித்திய வாழ்விற்கு செல்லவும் அவர்கள் ஆயத்தமாய் இருந்தனர். **"தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். ", (பிலி 4:12)** என்றும், **"நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம். இந்தத் தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோமென்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம். நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம். அதினிமித்தமே நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்." (2 கொ 5:6-9)** என்றும் அப். பவுலினால் கூற முடிந்தது.

ஆம் நம் ஆதாரம் அவரே, அவரே நித்திய கன்மலை, அவர் மேல் சார்ந்து வாழ்வோர் ஒருபோதும் தளர்வடைவதில்லை, சோர்ந்துபோவதுமில்லை. கர்த்தர் தாமே நம் ஆதாரமாய் என்றென்னும் நம்மோடிருந்து நம்மை வழிநடத்துவாராக, ஆமென், அல்லேலூயா.

**ஆதாரம் நீ தான் ஐயா , என்துரையே,**
**ஆதாரம் நீ தான் ஐயா**

## அனுபல்லவி

**சூதாம் உலகில்நான் தீதால் மயங்கையில்**

### சரணங்கள்

**1. மாதா பிதாவெனைத் தீதாய் மதிக்கையில்**
**மற்றோர்க்குப் பற்றேதையா , எளியன்மேல்,**
**மற்றோர்க்குப் பற்றேதையா , எளியனுக்கு --- ஆதாரம்**

**2. நாம் , நாம் துணையென நயந்துரை சொன்னவர்**
**நட்டாற்றில் விட்டாரையா ; தனியனை**
**நட்டாற்றில் விட்டாரையா ; தனியனுக்கு --- ஆதாரம்**

**3. கற்றோர் பெருமையே , மற்றோர் அருமையே**
**வற்றாக் கிருபை நதியே , என்பதியே**

வற்றாக் கிருபை நதியே , என்பதியே --- ஆதாரம்

4. சோதனை யடர்ந்து வேதனை தொடர்ந்து
துக்கம் மிகுவேளையில் என் சுகிர்தமே,
துக்கம் மிகுவேளையில் , உன் தாசனுக்கு --- ஆதாரம்

*ஆ.தேவதாசன்*